ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2345/40 - 2023 අගෝස්තු මස 15 වැනි අඟහරුවාදා - 2023.08.15

*2345/40 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**பதுளை - கதிர்காம தேவாலயத்தின் வருடாந்த பெரஹரா ஊர்வலம்**

(362 ஆம் அத்தியாயமான) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின்படி வெளியிட்டுள்ள 1948, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 9902 ஆம் இலக்க வர்த்தமானி, 1951, ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய 10283 ஆம் இலக்க வர்த்தமானி, 1955, மாச்சு 25 ஆந் திகதிய 14778 ஆம் இலக்க வர்த்தமானியினூடாகவும், 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரம் வழங்கல் (பிரதேச செயலாளர்களுக்கு) சட்டத்தின் ஊடாக 2009.10.02 ஆந் திகதிய 1622 ஆம் இலக்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதுளை கதிர்காம தேவாலய (வருடாந்த பெரஹரா) தொடர்பான சட்டக்கோவையின்படி பதுளை பிரதேச செயலாளர் துஷாரி அனுராதா நாணயக்கார ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, 2023 ஆம் ஆண்டின் பதுளை கதிர்காம தேவாலயத்தின் வருடாந்த பெரஹரா தொடர்பாக பின்வருவனவற்றை ஆணையிடுகின்றேன்.

1. 2023, செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதிய "கப்" நடுகையோடு பதுளை கதிர்காம தேவாலய வருடாந்த பெரஹரா ஆரம்பமாகி, 2023, செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி முதல் 20 ஆந் திகதி வரை (5 நாட்கள்) உள்ளக பெரஹரா, 2023, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி முதல் செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி வரை (5 நாட்கள்) குபல் பெரஹரா, 2023, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி முதல் 30 ஆந் திகதி வரை (5 நாட்கள்) ரந்தோலி பெரஹரா, 2023, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி அதிகாலை நீர் வெட்டும் வைபவம், 2023, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி மதியம் பெரஹரா தேவாலயத்தினுள் வருகையோடு திருவிழா முடிவடையும் என்பதை அறிவித்துக் கொள்கின்றேன்.

2. **பெரஹராவின் பயணப் பாதை.**- 2023, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி பதுளை கதிர்காம தேவாலயத்தில் இருந்து பதுளை லோவர் வீதி, பசறை வீதி (முதியங்கனை சுற்றுவட்டம்), லொன்டன் வீதி, அநகாரிக தர்மபால மாவத்தை, கொக்கோவத்தை வீதி, உதயராஜ மாவத்தை, கிங்ஸ் வீதி, பஸார் வீதி, லோவர் வீதி, பதுளை கதிர்காம தேவாலயத்தை வந்தடைதல்.

3. பதுளை கதிர்காம தேவாலயத்தின் காணியினுள் மற்றும் தேவாலயத்திற்குரிய சிம்மாசனம் அமைந்துள்ள காணி ஆகிய இடங்களிலும் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் உணவு சமைப்பது மற்றும் வியாபாரம் செய்வதைத் தடை செய்கின்றேன்.

1A - G 40125 — 07 (2023/08)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*4*. பெரஹரா நாட்களில் பிரதான வீதிகளில் தனியார் வாகனங்கள் நிறுத்தி வைப்பதைத் தடை செய்வதுடன், துவிச்சக்கர வண்டி மற்றும் தள்ளுவண்டிகள் உட்பட அனைத்து வாகனங்களும் என்னிடம் அல்லது தேவாலய பொறுப்பாளர் நிலமே அவர்களிடம் அனுமதிப்பத்திரம் பெறாமல் தேவாலய காணியினுள் நுழைவதைத் தடை செய்கின்றேன்.

*5*. பெரஹரா பயணிக்கும் பாதையில் பதுளை மாநகர சபையின் மூலம் முறையான அனுமதியுடன் அமைக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் தற்போது உள்ள நிலையான கட்டிடங்கள் சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். காணித்துண்டுகளை வாடகைக்கு எடுக்கும் வியாபாரிகள் தாம் தேவாலய பெரஹராவின் பின்னர் தமது தற்காலிகக் கட்டிடங்களை அப்புறப்படுத்தியதன் பின்னர், பெரஹரா பயணிக்கும் பாதை மற்றும் தேவாலய காணியினுள் பொலித்தீன் உட்பட அனைத்து விதமான கழிவுகளையும் ஒன்று சேர்த்து மக்கள் பொது சுகாதார பரிசோதகர்களின் அறிவுறுத்தலின் பிரகாரம் அகற்றுதல் வேண்டும்.

*6*. என்னிடம் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரம் இன்றி புனித பூமியினுள் மற்றும் அதன் பகுதிகளில் எந்தவித தற்காலிகமாகவேனும் கட்டிடம் அமைப்பதைத் தடை செய்கின்றேன்.

*7*. எவரும் எனது அல்லது பதுளை மாநகர சபையின் மூலம் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் பாதையாகப் பயன்படுத்தப்படும் அல்லது வேறாக்கப்பட்ட அல்லது ஏதாவது நிலம் அல்லது புனித பூமி பிரதேசத்தினுள் ஏதாவது நிலத்தை அடிப்படையாகக் கொண்டு கூடாரம் அல்லது ஏதாவது கட்டிடம் ஒன்றை அமைப்பது அல்லது பெரிதாக்குவது போன்றனவற்றைச் செய்தல் கூடாது.

*8*. பட்டாசு வெடி பிரதேசத்தினுள் கொளுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

*9*. பிரதேச செயலாளரின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் அனுமதியின்றி எந்த ஒரு நபரும் இலக்கம் 3 இல் குறிப்பிட்டுள்ள பாசறைப் பிரதேசத்தில் டிக்கட்டுகள், கொடி போன்றவை விற்றல் அல்லது வேறு விதமான முறையில் எந்தவொரு நிதி அறவிடலும் செய்யக் கூடாது.

**துஷாரி அனுராதா நாணாயக்கார**,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பதுளை,
2023, ஓகத்து 14.

EOG 08-0151